தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௫ — திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௧ — தை — 1950—சனவரி — மலர் ௰

பொங்கல் திருநாள்

"பொழுது புலர்ந்தது ; புன்மை இருட்கணம் போயின முன்பே." இறைவன் திருவருளை வணங்குகின்றோம். தமிழர் எல்லாருக்கும் பொங்கும் மகிழ்ச்சியுடன் பொங்கல் வாழ்த்துக் கூறுகின்றோம்.

பொங்கல் என்பது பெருந்தமிழ் மக்கள் பழங்காலம் தொட்டு ஆர்வத்தோடு கொண்டாடும் ஒரு திருவிழா வாகும்; மிகச் சிறப்பாகக் கருதும் ஒரு திருநாளும் ஆகும். பொங்கல் திருநாளின் கருத்தை மறந்திருந்த தமிழர், பழமை நினைந்து பாராட்டத் தலைப்பட்டிருக்கின்றனர். அன்பர்களிடமிருந்து எமக்கு வந்திருக்கும் பொங்கல் வாழ்த்துச் செய்திகளிலிருந்து தமிழர்கள் பொங்கலின் சிறப்பை எத்துணைப் பெரிதாகப் பாராட்டுகின்றார்கள் என்பது உணர்ந்து மகிழ்கின்றோம்.

தமிழர் இப்பொங்கல் நாளை ஒரு உயர் நாளாகவும், திருநாளாகவும், பெருநாளாகவும், நன்னாளாகவும், பொன்னாளாகவும், நன்றி நாளாகவும், வென்றி நாளாகவும் போற்றிக் கொண்டாடுகிறார்கள். தொண்டர்கள் பெரு மக்களுக்கு நன்றி பாராட்டலும், பெருமக்கள் தொண்டர் களைப் பாராட்டுதலும் குறிக்கும் திருநாளாக இருக்

கின்றது இப் பொங்கல் நாள். வேண நலங்களை மாணுற அளித்த இறைவனை வணங்கிப் பகடு நடந்த கூழைப் பல்லாரோடுண்டு மகிழ்ந்து குடிமக்கள் தமக்குத் துணையாய மள்ளர்களையும், பகடுகளையும் பாராட்டிச் சிறப்புச் செய்யும் திருநாளும் ஆகும் இப்பொங்கல் நாள்.

(இந் நன்னாளில் நலம் பாராட்டிய அன்பர்கட்கெல்லாம் நம் சங்கச் சார்பாகவும், எம் சார்பாகவும் நன்றிகூறி அவர்களும் ஏனைய தமிழரும் பொதுவாக மன்பதை யெல்லாரும் எவ்வகை நலங்களும் பெற்று வாழ வேண்டித் திருவருளை வழுத்துகின்றோம்.)

* * * *

திருவாவடுதுறை ஆதீனத்தில் இருபதாவது பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் தெய்வத்திரு, அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் பிறந்த நாளாகிய நிகழும் விரோதி ஆண்டு மார்கழித் திங்கள் 18 ஆம் நாள் (1—1—50) ஞாயிற்றுக் கிழமை நம் சங்க அன்பர்களும் கல்வி நிலைய ஆசிரியர்களும் திருவிடைமருதூரில் மகா சந்நிதானம் அவர்களைக் கண்டு நன்றி கூறிப் பாராட்டுரை வழங்கினார்கள்.

மகா சந்நிதானம் அவர்கள் அருளுரை கூறி வாழ்த்தினார்கள்.

* * * *

அடுத்த நாள் திங்கட்கிழமை பிற்பகல் திருவாவடுதுறை கந்தவிலாசத்தில், மகா சந்நிதானம் அவர்கள் திருமுன், பழங்கலைத் திருவிழா நடைபெற்றது. தஞ்சை நாட்டாண்மைக் கழகத் துணைத்தலைவர் திருவாளர். C. மருதவாணன்பிள்ளையவர்கள் இத் திருவிழாவைத் தொடங்கிவைக்க, நாட்டாண்மைக் கழகத்தலைவர் திருவாளர் V. நாடிமுத்துப் பிள்ளை யவர்கள் தலைமை தாங்கி, ஆதீனத்தின் பெருமையையும், தமிழர் பழங்கலைகளின் சிறப்பையும், திருவாவடுதுறை முதலிய ஆதீனங்கள் அவற்றைப் போற்றி

321 ஆம் பக்கம் பார்க்க.

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Phd.

(முற்றொடர்ச்சி: துணர் உரு, மலர் க, பக்கம் 278.)

வாய்மை.

4. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ-ள்) புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்-பிறர்க்கு மலப் பிணிப்புக்களாகிய குற்றங்களின் நீங்கிய நன்மையாகிய வீடுபேற்றைப் பரம்பரையான் உதவு மெனின்; பொய்ம்மையும் வாய்மை யிடத்த-நிலையுதலுள்ள பயனாகிய வீடுபேற்றை நேரே யளிக்கும் மெய்ம்மைச் சொற்களே யன்றி நிலையுதலின்றிய பயனாகிய பதமுத்திகளையே நேரே யளிக்கும் பொய்ம்மைச் சொற்களும் வாய்மைச் சொற்களின் பாலவாம், ஆகலான் தவஞ் செய்வானுவான் தன் மாணுக்கரது பக்குவத்திற் கேற்ற பெற்றி இத்தகைய வாய்மையுங் கடைப் பிடிக்க எ-று.

உம்மை, இறந்தது தழீஇய வெச்சப் பொருளது. இடத்த, பலவின்பாற் குறிப்பு வினைமுற்று. புரை யென்பதன் பின் ஐந்தனுருபு விரிக்க. ஈண்டு அது ஆணவம், கன்மம், மாயையாகிய மும் மலங்களின் பிணிப்பை யுணர்த்தி நின்றது. நன்மை என்பது காரிய வாகு பெயராய வீடுபேற்றைக் குறித்து நின்றது. ஈண்டு மெய்ம்மைச் சொற்கள் என்றது முக் காலத்தும் நிலை பேறுடைய பயனை யளிக்குஞ் சொற்களை யென்றும், பொய்ம்மைச் சொற்கள் என்றது நிலையுதலின்றிய பயனை யளிக்குஞ் சொற்களை யென்று மறிக.

'யாதொரு வாற்ருனும் தீமை பயவாதனவற்றைச் சொல்லுதலேயே அறிவுடையோர் போற்றும் வாய்மை யென்றீர். வீடுபேறெய்துவித்தற்குரிய ஞான சாதனமும் அதன் துணைச் சாதனங்களுமாகிய இவற்றை யன்றி ஏனைய வெல்லாம் பிறப் பிறப்புக்களைத் தரு முகத்தானே தீமை பயக்குமாகையான், வாய்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது ஞான சாதனத்தையும் அதன் துணைச் சாதனங்களையுமே சொலல் என்பது பெறப்படும். உலகத்து மக்களுட் சிறுபான்மையாரே ஞான சாதனத்திற்கு அருகதை காட்டி நிற்பராகையான், தவஞ் செய்வானுவான் அவரிடமே அறிவுடையோராற் புகழப்படும் வாய்மைச் சொற்களைச் சொல்லி நிற்பன். ஆயின் ஞான நெறிக்குத் தகுதி காட்டாத பெரும்பான்மையாராகிய பிறருக் கெல்லாம் அவன் சொல்லுஞ் சொற்கள் பொய்ம்மை யாகு மன்றி வாய்மை யாகாவே' என்ருற்கு 'அற்றன்று அவர்க்குச் சொல்லும் பொய்ம்மைச் சொற்கள் குற்றங் களின் நீங்கிய வீடுபேருகிய நன்மையை நேரே பயக்கா விடினும் பரம்பரையான் பயக்கு மெனின் வாய்மை யாகு மென்று இக் குறளாற் கூறுகின்ருர்.

தவஞ் செய்வானுவான் தவஞ் செய்து தான் பெற்ற பேரின்பத்தைப் பிறரும் அனுபவிப்பாராக என்னுங் கருணை யுள்ளத்தொடு நின்று இருவினை யொப்பு முதலியன நிகழப்பெற்ற மாணுக்கருக்கு நிலையுதலுள்ள பயனுகிய வீடுபேற்றை நேரே பயப்பனவாகிய மெய்ம்மைச் சொற் களைச் சொல்லி அவரைத் தெருட்டி நிற்பன். ஏனையோர் மாட்டும் அவன் கருணை செறியப்படுமாகலான், அன்னுருள் தன்மாட்டடைந்தார்க்கு அவரவர் நிலைகளை யறிந்து படி முறையானே தூலாருந்ததி நியாயம் பற்றி நிலை பேறில வாகிய பயன் றருஞ் சில பொய்ம்மைச் சொற்களைச் சொல்லி அவரை வழிப்படுத்தியும் பக்குவப் படுத்தியும் நின்று, அப் பக்குவ முதிர்ச்சியில் மெய்ம்மைச் சொற்களைச் சொல்லி அவரது தவத்தை முடிவு போக்குவன் ஈண்டு அப் பொய்ம்மைச் சொற்களும் நேரே முத்தி நிலையைக் கொடாவாயினும், படி முறை யானே அந் நிலை தலைப்படுதற் கேதுவாகு மென்பது பற்றி வாய்மைச் சொற்களின் பாலவா மென்று கூறியவாருயிற்று.

இவ்விரு பாக்களானும் தவஞ் செய்வானுவானுக்குத் தன் மாணுக்கர்க்கு உபதேசிக்கும் முறைமையில் தனக் காயினும் அவர்க்காயினும் தீங்கு பயக்கும் மெய்ம்மைச் சொற்களும் வீடுபேறு பயவாப் பொய்ம்மைச் சொற்களும் வாய்மை யாகா வெனக் கடியப்பட்டமை காண்க.

இதனுனே, சமய தீக்கைக்குரிய பக்குவங் காட்டி நிற்பானுக்கு உபதேசித்தது சிவோகம் பாவனே யெனின், அது தீங்கு பயக்கும் மெய்ம்மைச் சாதனமாதல் பற்றி வாய்மை யாகாதென்றும், சிவயநம வெனின். அது வீடு பேறு பயவாத பொய்ம்மைச் சாதன மாதல் பற்றி வாய்மை யாகா தென்றும், நமசிவய வெனின், அது வீடுபேறு பயக்கும் பொய்ம்மைச் சாதன மாதல் பற்றி வாய்மையின் பாலதென்று மறிக. இனி, விசேட தீக்கைக்குரிய பக்குவங் காட்டி நிற்பானுக்குச் சிவோகம் பாவனே தீங்கு பயக்கும் மெய்ம்மை யாதல் பற்றி வாய்மை யாகா தென்றும், சிவயநம வென்பது வீடுபேறு பயக்கும் பொய்ம்மை யாதல் பற்றி வாய்மையின் பால தென்றும், நமசிவய வென்பது வீடுபேறு பயவாத பொய்ம்மை யாதல் பற்றி வாய்மை யாகா தென்று மறிக. நிருவாண தீக்கைக்குரிய பக்குவங் காட்டி நிற்பானுக்குச் சிவோகம் பாவனே யாதொருவாற்ரு னுந் தீங்கு பயவாத மெய்ம்மை யாதல் பற்றி வாய்மை யாகு மென்றும், சிவயநம வென்பதும், நமசிவய வென்ப தும், வீடுபேறு பயவாத பொய்ம்மை யாதல் பற்றி வாய்மை யாகா வென்று மறிக.

இவ்விரு பாக்களானும் அறியக் கிடப்பனவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வழிபடு முறைகள் நான்கினும் வைத்துக் காட்டுதும்: இறைவனது இயல்பு உருவம் அருவம் என்னும் இருவகை வடிவுஞ் செல்லாச் சச்சிதானந்த சொரூபம் என்பதே அளவை களான் அறியக் கிடப்பவும், அவ் வியல்பை நுண்ணுணர் வின்மை பற்றி உள்ளவா றுணர்த்தினும் விளங்க மாட்டாதாராகிய மாணுக்கரைப் பக்குவப்படுத்தும் முறைமையில் சரியை, கிரியை, யோக மென்னும் மூன்று வகை உபாயங்களே மேற்கொண்டு அவற்றுன் அவரை வழிப் படுத்தியும் பக்குவப் படுத்தியும் நின்று, அப் பக்குவ முதிர்ச்சியில் ஞான மென்னும் வழிபடு முறையைக்

கொடுத்தற்கண் இறைவனது உண்மை யியல்பை உள்ள வாறு சொல்லி அவரை இறைவனுடன் ஒன்ருகச் செய்வது தவஞ் செய்வானது கடனுகும். அவன் இம் முறைகளுள் சரியை யென்னும் வழிபடு முறைக்குப் பக்குவங் காட்டி நின்ருர்க்கு, 'உருவமாகிய தூல வடிவமே பொருள். இறைவனை வழிபடு முறை காயத் தொழின் மாத்திரையான் ஆகமங்களில் விதித்தவாறு செய்யும் சரியை யென்பதே. இம் முறையைக் கையாளுபவர் இன்ன வின்ன செய்வர்' என்று கூறி வழிப் படுத்துவன். அங்ஙனம் வழிப் படுத்தப் பட்டாராவார் கிரியை யென்னும் வழிபடு முறைக்குப் பக்குவங் காட்டி நின்ருராயின், அவர்க்கு 'அருவுருவமாகிய சூக்கும வடிவமே பொருள். உருவம் அடியவர்க் கருளும் முறைமையில் இறைவன் கொண்ட திருமேனி. அவனை வழிபடு முறை காயத் தொழில் மனத் தொழில் என்னும் இருவாற்ருனும் ஆகமங்களில் விதித்தவாறு செய்யுங் கிரியை யாகும். அக் கிரியையானது இன்ன வின்னவாறு செய்தலாகும்' என்று கூறி அவரை வழிப் படுத்துவன். இனி இக் கிரியை யென்னும் முறைக்கணின்று பழகி அதன் கண் முதிர்ந்தார்க்கு 'அருவமாகிய அதிசூக்கும வடிவமே பொருள். உருவமும் அருவுருவமும் இறைவனை வழிபடுதற் கிடமாகிய திருமேனி, அவனை வழிபடு முறை மனத் தொழின் மாத்திரையான் ஆகமங்களிற் சொல்லியவாறு செய்யும் யோக மாகும். அவ் யோகமாவது இன்ன வின்ன வகையாற் செய்யற் பாலது' என்று கூறி வழிப் படுத்துவன். இனி, இச் சரியை கிரியை யோக நெறிகளின் நின்று அடிப் பட்டு வந்த பக்குவ முதிர்ச்சியானே அறிவு விளங்கப் பெற்ருர்க்கு 'உருவம் அருவம் யென்னும் இருவகை வடிவுஞ் செல்லாச் சச்சிதானந்த சொரூபமே பொருள். ஏனை உருவம், அருவுருவம், அருவம் என்பன வழி படுவோரை ஞான நெறிக்குப் பக்குவப் படுத்தற் பொருட்டுத் தூலாருந்ததி நியாயமாக எடுத்துக்கொண்ட வடிவங்கள். இறைவனை வழிபடு முறை காயத் தொழில் மனத் தொழில் என்னும் இரண்டனையுங் கைவிட்டு அறிவுத் தொழின் மாத்திரையான் ஆகமங்களிற் சொல்லிய வாறு செய்யும் ஞான மாகும். அஞ் ஞானமானது இன்ன வின்ன வகையாற் செய்யற் பாலது' என்று கூறி அவரை உய்தி கூடுவிப்பன். ஈண்டு, தவஞ் செய்வானுவான் சரியை கிரியை யோக வழிகளைச் சொல்லுதற்கண் புரை தீர்ந்த

நன்மை பயக்கும் பொய்ம்மைச் சொற்களைச் சொல்லி நின்றானுதல் பற்றி அவன் சொற்கள் வாய்மையின் பால வென்றும், ஞான வழியைச் சொல்லுதற்கண் யாதொரு வாற்றானுந் தீமை பயவாச் சொற்களைச் சொல்லி நின்றானுதல் பற்றி, அவன் சொற்கள் அறிவுடையோராற் புகழப்படும் வாய்மை யாகு மென்று மறிக.

இக் குறளுக்குப் பரிமேலழகர் ‘பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மைச் சொற்களின் பாலவாம்’ என்னும் உரையையும் ‘குற்றந் தீர்ந்த நன்மை அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்ற தோருயிர் அச் சொற்களின் பொய்ம்மையானே அதனி னீங்கி இன்புறுதல்........... இவை யிரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மை யெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மை யெனவும், அவற்ற திலக்கணங் கூறப்பட்டது’ என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

கேடாதல் சாக்காடாதல் எய்த நின்ற தோருயிரைத் தவஞ் செய்வானுவான் பொய்ம்மைச் சொற்களைச் சொல்லி அக்கேடு சாக்காடுகளின் நீக்கி இன்புறச் செய்தானுயின், அஃது அவனைப் பிறப் பிறப்பின் கண் உய்க்கும் பசு புண்ணிய மென்னுந் தீங்கு பயக்கும் பொய்ம்மையாகு மொழியச் சிவ புண்ணிய மாகிய வாய்மை யாகா தாகை யான் அழகியார் உரை வழீஇனு ரென்க. இதனுனே அவர் மெய்ம்மை பொய்ம்மைப் பாகுபாடுகள் பற்றியும் வழீஇனமை காண்க.

இனி, முன்னைப் பாட்டின் உரை விளக்கத்தில் ‘இதனுன் நிகழ்ந்தது கூற வென்பது நீக்கப்பட்டது. அதுதானும் தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையா மென்பது கருத்து’ என்று கூறுதற் கண் ‘அது தானும்’ என்பதன்கண்ணுள்ள உம்மையை எச்சப் பொருளிளாதல் சிறப்புப் பொருளிளாதல் கூறினு ரெனல்வேண்டும். எச்சப் பொருளிற் கூறினு ரெனின், தீங்கு பயவாத நிகழாதது கூறலை மெய்ம்மை யென்றும்,

தீங்கு பயக்கும் நிகழாதது கூறலைப் பொய்ம்மை யென்றுங் கூறல்வேண்டும். அவற்றைக் கூறுமையானே உம்மையை அப்பொருளிற் கூறினுரல்லர் என்பது புலனுகும். இனிச் சிறப்புப் பொருளிற் கூறினுரெனின் தீங்கை நிகழ்ந்தது கூறல் தானும் பயக்கும் என்பது தீங்கினது இழிவைச் சிறப்பிக்குமாயினும், பயவாதென்பது அதனைச் சிறப்பி யாதாகையான், உம்மையை அப்பொருளினுங் கூறினுரல்ல ராயிற்று. மற்று உம்மையான் எப்பொருளைக் கருதி நின்றுரெனின், சிறப்புப் பொருளையே கருதினு ரென்க. கருதினு ராயினும் அப்பொருள் பெறப்படாமை சிறப்பும் மையைப் பற்றி அவர் கொண்ட திரிபுணர்ச்சியா லாயிற் றென்க.

இப்பாட்டு என்னுதலிற்றேவெனின்—தவஞ் செய்வா னுவான் தன் மாணுக்கரைக் கடை போக்குதற்கு அவரு டைய பக்குவங்களுக் கேற்பச் சோபான முறைபற்றிப் பொய்ம்மைச் சொற்களைச் சொல்லியாயினும் அவரை வழிப்படுத்தல் வேண்டும். எ-து.

5. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(இ-ள்) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்—தவஞ் செய்வானுவான் பொய்யாமைக்கட் சென்ற தன் கருத்துக் காரணமாகப் பொய் கூறுது ஒழுகுவனுயின்; உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்—அறிவுடையோர் அன்பின் கண் அவன் எல்லாம் உளன், ஆகலான் அன்னுன் பொய்யாமை என்னும் வாய்மையைக் கடைப் பிடிக்க. எ-று.

உள்ளம் என்பது இரண்டிடத்துங் காரணவாகுபெயர். மூன்றனுருபு ஏதுப் பொருளது. பொய்யா தென்னும் இறந்த காலத்துச் செய்தெனெச்சத் தெதிர்மறை. ஈண்டு நிகழ்காலத்துக்கண் வந்தது; பொய்யாமையும் ஒழுகுதலும் உடனிகழ்த லென்னும் பொருட்டு ஒழுகின் என்பது எதிர் காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் வந்த செயி னென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அது தன் வினை

319 ஆம் பக்கம் பார்க்க.

வள்ளுவர் கண்ட அரசியல்

(வேலூர்க் காரழகன்)

மாநிலத்து வாழும் மக்களினம் அரும்பிய நாள் தொட்டு இன்றுவரை எண்ணிலாக் கொள்கைகள் அரும்பி அருகி யொழிந்தன. கனிவுறுங் கொள்கைகள் கூறிக் களிப்புற வைத்த அறிஞர்கள் பலர். உள்ளத்தே உறைந்து கிடக்கும் மலை யொத்த மாறுபாடுகளை மாய்த்து அன்புச் சோலையை அரும்ப வைத்தவர்களும் பலர். தனி மனிதன் தக வெய்தலே மாண்புடையதென்று மொழிந்து சமூகத்தைச் சிந்திக்காது சென்றவர்கள் பலர். உடலினுள்ளிருக்கும் உயிர், உடலை விட்டுக் கிளம்பி, கடவு ளடியெய்தலே மிகச் சிறந்த தென மொழிந்தவர்கள் பலர்.

என்றாலும், அண்மையி லரும்பிய பலர், தனி வாழ்வைக் கருதாது, சமூகத்தைச் சிந்திக்காது, அரசியலால் யாவும் முடியு மெனத் துணிந்து, அரசியலை நடாத்துங்கால் நடை முறையில் நடவாமையால் உள மொடிந்து உலகை அல்லலுக் கிரையாக்கியதைக் கண்டோம்; மேலும் பொருளைச் சமூகத்திற் குரியதாக்கின் குறைபாடுகள் குலைந் தொழியு மெனினும், ஒழுக்க மின்மையான், யாண்டும் இழுக் கியங்கியதைக் கண்டதோ டல்லாமல், தீங்கும், பொல்லாங்கும், பகைமையும் மக்களிடை இருத்தல் வெள்ளிடை மலை.

என்றும் மாற்ற மில்லாப் பேரறத்தை முன்னிறுத்தி, மன்பதை மாண்புற வேண்டுமென்ற ஒப்புரவைக் குறிக்கோளாகக் கொண்டு, பிறந்தோ ரனைவரு மோரின மென்றுணர்ந்து, ஒத்த வாய்ப்பை யாவருக்கும் நல்கி, யாவரும் நலமுற வேண்டுமென்ற நல்ல எண்ணங் கொண்டவர்கள்

நாடாளின், பகைமை பறந்து, மாறுபாடு மாய்ந்து, கூறு பாடு குலைந்து, அன்பு அரும்பி ஒற்றுமை ஓங்கும்.

வையகத்தை உருவாக்குவதும் உடைத் தெறிவதும் தனி மனிதனின் எண்ண மென்பதை எண்ணல் வேண்டும். பண்புடைமையே உருவாகியவ னுளத்தில் அறம் அரும்பி அது நடை முறையில் நாட்டில் நிலவ முயலுகையில், அவ் வெண்ணத்திற்கு விளக்கந் தந்து, மக்களைத் தன்பாலிழுத்து, அவ் வெண்ணம் ஏனையோருக்கும் உரியதாக்குவதே சட்டம். பாரில் பரந்த நிலப் பரப்பையும், எண்ணிக் கையில் நிரம்ப மக்களையும், ஒரே மொழியையும், ஒரே சமயத்தையும் பெற்ற சீன நாட்டில் அரும்பிய பேரறிஞர் 'கன்பூசியஸ்,' 'தூய காற்று போன்றவர் நாடாள்பவர்; பசும் புல் போன்றவர் மக்கள்,' என்றியம்பினர். மேல் புலத்தில் யவன நாட்டில் அரசியல் ஒளியை ஏந்திய பிளாட்டோ 'உண்மைத் தத்துவமும், அரசிய லதிகாரமும் ஒன்றுகி ஞானி நாடாள வேண்டும்; அல்லது நாடாள்பவன் ஞானியாக வேண்டும்,' என்று கூறினர். நீதி, பண்பு, மெய்யறிவு, உறுதி இவை யாவும் நாடாள்பவன் பெற்றி ருத்தல் வேண்டுமென்று கூறியதுடன் 'நலமே புரிதல்' இவர்கள் கடன் என்று வற்புறுத்தினர்.

பைந் தமிழன்னையைப் பன்னீராயிரம் பாமாலையால் அழகுற வைத்து, தமிழ்க் கலைக் கோயிலைக் கட்டிய கவி யரசர் கம்பர், அரசியலை நடாத்துபவர்க்குரிய உயர் உடைமையை யுரைக்குங்கால், நன்மை-தீமை இரண் டினையு மாராய்ந்து, நன்மையே நல்கும் நன் மருத்துவ னியல்பைத் தான் அரசியலார் பெற்றிருத்தல் வேண்டு மென்று கூறியதை உளத்திருத்தல் வேண்டும். பகைவ னுயினும், எதிரியாயினும், நலம் புரிதலே நன் மருத்துவனின் தலையாய கட னென்பதைப் போன்றே, நாடாள்பவரிடத் திவ் வியல் பிலங்கல் வேண்டு மன்றே!

மேல் நாட்டிலும், கீழ் நாட்டிலும் பண்டைய நாளில் நாடாள்பவர்களை ஞானி யென்றும், இறைவ னென்றும், கருதி வந்தார்கள். இக் காலத்தில் அரசியல் அவல மலிந்த தென்றும், புல்லர்களுக்குப் புகலிட மென்றும், மக்கள் நினைக்கத் தொடங்கியுள்ளனர். அரசிய லென்பது வையகத்திற்கே நன்மை நல்கவல்ல உயரிய பெருங் கலை. தனி உரிமைக்கும், சமூக உரிமைக்கும் முரண் நிகழாமல், அறம் நிலவ, நீதி ஓங்க, அன்பு ஆக்க முற, வறுமையின்றி உயிரினங்கள் வாழ, கல்வி என்னும் பேரொளி யாவரும் பெற்று, பண்புடைமையை யாவரும் எய்தி, ஏனையோரும் நலமுற்று உயர்வுற வைப்பதே அரசியல். இப் பொன்னனை பெருங் கலைக்கு மாசு ஏற்படாமலில்லை. தம் உயிர்க்கும், தம் பொருளுக்கும் ஊறு நிகழாமல் காத்துப் பேணுவதைப் போன்றே, நாட்டுப் பொருளையும், உயிரினங்களையும் அரசியலார் காத்தல் வேண்டும்.

தகவுடைய தமிழகத்தில் தீங்கில்லாத் தங்கம் போல் எக் காலத்தும் - எல்லோர்க்கும்-ஏற்புடைத்தாய்-உவமை யற்ற உயர்வுடைய பெரியதோ ரிலக்கியத்தை யாத்து, அதில் வளமுடைய வாழ்வியலை விளம்பி, தூய அரசியலையும் துலங்க வைத்தார் வான்புகழ் வள்ளுவனார். தனி மனிதனுக்குரிய அறக் கடனை யறைந்து-பண்புடைமையே பிறங்க வேண்டுமென்று சமூகத்திற்கு வற்புறுத்தி. இவ்விரண்டினையும் இனிதே நடாத்தும் அரசியலாருக்கும் ஆவன அறிவுறுத்தினார். அறத்தை முன்னிறுத்தி, நீதியைத் துணையாக்கி, பணியாற்றலே பெருங் கடனென முழக்கி, பகுத்துண்டு வாழ்தலே தலையாய தென்றியம்பி, பண்புடைமையும் அறிவுடைமையும் வாழ்வி னிறுதி என்று வைத்தார் வான்புகழ் வள்ளுவனார்.

பல துறைகள் கொண்ட வையகத்தில், ஏனைய துறைகளையும் ஆராய்ந்தறிந்து நன் முடிவு கண்டவர் வள்ளுவர்

ஒருவரே. இறை யியலையும், தனி மனிதரையும், சமூகத்தையும், அரசியலையும் அன்பால் பிணைத்து, அறத்தா லொன்ருக்கி, ஒற்றுமை யொளியை ஒளிர வைத்தவர் வான்புகழ் வள்ளுவரே.

பார், பாழடையாமல் பீடுற வேண்டுமென்று, இனப் போருக்கும், வர்க்கப் போருக்கும், உடையவருக்கும், அற்றவருக்கும், இன்ன பிற முரண்பாடுகளுக்கும் இடமின்றி, நடை முறைக்கு ஏற்ற நலமுடைய நல்லதோர் முறையைப் பொலிவுடைப் பைந்தமிழ் இலக்கிய மெருகிட்டுத் துளக்கமற விளக்கினவர் வான்புகழ் வள்ளுவரே.

இல்லறமாகிய காதல் மலர்வனத்தை மகிழ்வுடன் மொழிந்து, அக் காதலின் விளைவாகிய மக்கள் பேற்றினைப் பகர்ந்து, மகனுய்ப் பிறந்த யாவரும் ஒல்லும் வகையான் ஓவாதறம் புரிதல் வேண்டுமென் றுரைத்து, உயரிய ஒழுக்கத்தை யாவரும் பற்றி உயர்வுற வேண்டுமென மொழிந்தார். பொருள் நிலையை நன்குணர்ந்து பொருள் ஓரிடத்தில் தேங்கியும், மற்ருேரிடத்தில் தகைந்தும் இருத்தலால் வறுமையும்-பஞ்சமும்-பட்டினியும் நிலவுதல் கண்கூடு. இத் தாழ் நிலை நிலவுமாயின் உடையவர்-இல்லாதவர் என்ற இரு பிரிவுகள் பிறங்கி ஒன்றையொன்று மோதித் தலைகள் மிதக்கும் இரத்த ஆறுகள் நாட்டில் ஓடுமென்றதை உய்த்துணர்ந்தே அறங்களுள் தலையாய அறம் ' பகுத்துண்டு பல்லுயி ரோம்புதலே, ' என்று கூறியுள்ளார். பகுத்துக் கொடுத்ததோடன்றி, பல்லுயிரையும் ஓம்பல் வேண்டுமென்று உரைத்ததைக் கருதின் தாய்க்கும் சேய்க்குமுள்ள அன்பாகியபிணைப்புத் தனியொருவருக்கும் சமூகத்திற்கும் இருத்தல் வேண்டு மென்பது நனி விளங்காமலில்லை. இவ் வுயரிய முறையை மக்கள் கையாளின் உயரினங்களனைத்தும் அன்பின் பிழம்புகளன்ருே !

மன்பதைக்கு நீர் இன்றியமையாதது ; நீரின்றி மன்பதை வாழ்தலியலாது ; மன்பதைக்கு நீரினும் இன்றி

யமையாதது வேறில்லை. இவ்வளவு கட்டாயத்துக்குரிய நீரை, மக்கள் தேவைக் களவு பயன்படுத்துகின்றனர்; தேவைக்கு மீறி சேமித்துவைக்கிருர்களில்லை; நீர் மக்க ளனைவருக்கும் உரியதாகிறதன்றி தனி மனிதனுக்கே உரிய தென்ற நிலை ஏற்பட்டதில்லை. குளத்துநீரை மக்களனை வரும் பயன் படுத்துகிருர்கள்; ஆனல் வீணுக்குவதில்லை. இந்த நிலையிலேதான் செல்வமும் இருத்தல்வேண்டும்; செல்வம் யாவருக்குமுரியதாய்-யாவரும் பயனெய்த இருத் தல்வேண்டும். நீருக்கும் மன்பதைக்கும் உள்ள தொடர் பைப் போன்றே, செல்வத்திற்கும் மன்பதைக்கு மிருத்தல் வேண்டுமென்று வள்ளுவர் கூறுகிருர். இந்நிலை ஏற்படின் வர்க்கப் போருக்கு வழியில்லை. உணவையும்-பொருளையும் உரிய முறையில் அனைவருக்குமளித்து வறுமைக்கும்-பட் டினிக்கும் இடனின்றி நல்ல முறையை வகுத்துள்ளார் வள்ளுவர்.

நாட்டையாண்டு நலமுறைவைக்கும் அரசியல் தலைவர் களுக்குரிய பெரும் பொறுப்பை வள்ளுவர் விளங்கக் கூறு கிருர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இவைகளை அணிகலன்களாகப் பெற்றவர்களே நாடாளத் தகுதி யுடையவ ரென்றுரைத்து, அவர்களறத்தினின்று வழு வாது-அறங்கடந்தவைகளைப் புரியாது, வீரத்தினின்று வீழாது, அரசோச்சல் வேண்டுமென்று வள்ளுவர் கட்டளை யிட்டு, இம்முறையில் ஆளப்பெறு மரசே மானமுடைய தென்றியம்புகிருர்.

நாடாளவந்தவர்கள் நாட்டிற்கு நலம் நல்கப் பொருள் வருவாய்க்குரிய வழியைக்கண்டு, அவ்வண்ணமேபொருளை ஈட்டி, ஈட்டிய பொருளைக் காத்து, காத்தபொருளை மக்கள் நலமுற வழங்கல் வேண்டுமென்கிருர். நாடாள வந் தவர்கள் நாட்டிலுள்ள மன்பதைக்குக் கல்வி ஒளி நல்கி, கல்வியால் மக்கள் மேன்மையுறல் வேண்டுமென்கிருர். விலங்கினத்திற்கும்-மக்களினத்திற்கும் உள்ள வேறுபாடு

கல்வியே. மக்களாய்ப் பிறந்துங் கல்வி யில்லையேல் விலங்குகளன்றி வேறென்ன? கல்விக்கேற்ற அறிவுதான் மக்களுக்காதலின், கல்வி யறிவு மக்கள் பெறுவதே அரசியலாரின் முதற்பணி. வையகத்திலிலங்கும் செல்வங்களுக் கழிவுண்டெனினும், அழியாச் செல்வம் கல்வியே. அக் கல்விதான் அறிவுடைமைக் கடிப்படையாதலின், அக் கல்வியைப் பரப்பி, அனைவரையும் அறிவியற் பிழம்புகளாகத் திகழ வைத்தல்வேண்டும். அறிவுடைமை ஆக்கமுற்ற நாடே உலகில் உயர்வெய்திய நாடாகும். அறிவுடைமையால் கலை யொளி யாண்டும் பரவி மன்பதை மாறும்; அறிவுடைமை யொன்றே யாவற்றையும் பெற்றதாகும்.

அறிவுடைமை பரவிய நாட்டில் அறிஞர்கள் நாட்டிற்குத் தலைமை தாங்கி நாட்டை நலமுற வைப்பர். நாட்டை நலமுற வைக்கும் தலைவர்கள் பசியைப் பறக்கடித்து, பிணியைப் புறமுதுகிட் டோட வைத்து, பகைமையே வளர வொட்டாது, ஆளுவதே தீங்கற்ற ஆட்சி என வள்ளுவர் உரைக்கிறார்.

மேகத்தைத் தடுத்து மழை பொழிய வைத்து, காட்டைத் தன்னகத்தே கொண்டு விலங்கினங்களை வாழ வைத்து, விலை யுயர்ந்த மாணிக்கங்களை உற்பத்திச் செய்து நன்மையை நல்கும் மலைகளும், மழையாலும், ஊற்றாலும் வளமுற வைக்கும் இரு புனலும், நாட்டில் பாயும் ஆறுகளும், ஒரு நாட்டின் உறுப்பென உரைக்கின்றார் வள்ளுவர்.

நாட்டி னியல்பை நவின்று, நாட்டு மக்க ளனைவரும் அற வழி நின்று-ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துப் பண்புடைமை எய்தித் தனி மனிதனும் சமூகமும் காழ்ப்பின்றி ஒன்றுபட்டுப் பகுத்துண்டு வாழ்தலை வற்புறுத்தி, உடையவர் இல்லாதவர் என்ற மாறுபாட்டை மாய்த்து, இயற்கை யறிவும் நூலறிவும் பெற்று நடுநிலை வழுவாது அறவழி நிற்பவரே நாடாள்பவரென்று கூறிச், சிறந்த அரசியலை அவனிக் களித்து அழகுற வைத்தவர் வான்புகழ் வள்ளுவரே.

மக்களே போல்வர் கயவர்

வித்துவான், சீ. மணிவாசகன், தமிழாசிரியர்
செயிண்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளி, மன்னார்குடி.

உலக மென்பது உயர்ந்தோர் மேற்றுதலின் அவ் வுயர்ந்தோ ரொழுகிய நன்னெறிக் கண்ணே, வள்ளுவ ருள்ளிய வாழ்க்கை யுருவினையை, எவ்வ துறைவ துலகம் அவ் வுலகத்தோ டொப்பச் செலுத்தி, விழுமிய பண்பும் கெழுமிய அன்பும், குழுமிய நண்பும் தழுவி, உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளுந் திறனுற்று, மனஞ் சென்றவிடந் தொறும் ஊன்றி யுணர்ந்து ஆராய்ந்தறிந்து தெற்றத் தெளிந்து, அத் தெளிபொருள் தீதளிக்குமெனின் ஓரீஇ, நல மளிக்கு மெனின் நானிலம் புகழ நிறீஇ, நாளுந் தொண்டு தாளா துஞற்றும் நற் பேரறத்தைப் பொற்புறக் கொண்ட பெட்புறு மக்களே, வள்ளுவர் வகுத்த மக்கட் பண்புக் கேற்ற மன நல முழுதும் முற்ற நன் மக்களாவர்.

எனவே, அவ் வள்ளுவ ருள்ளிய மக்கட் பண்புக்கு மாறுபட்ட மனமும், வேறுபட்ட சொல்லும், கூறு பாடற்ற செயலுமுடைய மக்கட் பிறவியை, மாக்கட் பண்புள்ள கயவரென்றே, கற்றறிந்த கலை யறிஞர் பலரும் கருதி யுள்ளார் என்பது ஒருதலை.

நிற்க, வையத்துள் வாழ்வாங்கு வாழ வேட்கும் வைய மீன்ற தொன் மக்க ளனைவருக்கும், வாழ்க்கை நூல் வகுக்கப் புகுந்த வள்ளுவ ரடிகள், அவ் வாழ்க்கைக் கிடையூ றேற்றும் கயவர்களை நன் மக்கட் பிறவியினின்று வேறுபடுத்திக் காட்டுவார்,

> மக்களே போல்வர் கயவர் அவரன்ன
> ஒப்பாரி யாங்கண்ட தில்.

என்னும் அருங் குறள் கொண்டு அறிவுறுத் தருளினர்.

மக்களும் கயவரும் மனம், வாக்கு, செயல்களின் உண்மையானும் இன்மையானு மன்றி உருவின்கண்

வேறுபாடின்மையின், மக்களே போல்வர் கயவரென்றும், ஒன்றையொன்றொத்த லென்பது, சிறுபான்மையொத்தும் பெரும்பான்மை வேறுபட்டும் தோன்றுவதே யன்றி முழுது மொத்தல் இன்மையானும், கயவர் மக்களை வடிவால் முழுது மொத்தாற் போன்று வேறிரண்டு பொருட்கண் ஒப்புமை யாண்டும் யாவரும் காண முடியா தாகலானும், அவரன்ன ஒப்பாரி யாங் கண்டதில் லென்றார்.

மக்களே போல்வர் கயவ ரென்ற, தேற் றேகாரப் பொருளான் மக்கட் பண்பற்ற கயவர்களை மாக்களாகவே வள்ளுவர் கருதினர் என்பது தேற்றம். உலக மொடு நிலைஇய ஓங்கிய சிறப்பும், உயர்ந்த கேள்வியும், சான்ற புலவர்கள் பாடும் புகழினை வேட்கும் நாட்டன்புடைய நன்றறிவாளர்கள், தம் தாய் நாட்டுக் கல்வி, கலை, நாகரிகம், பண்பாடு, வாழ்க்கை யியல்பு, அரசியல் முறை, அறிவியற் கொள்கை, நாட்டுரிமை முதலிய மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத கொள்கைகளுக்குப் பொருந்தாத மாற் றாருஞற்றும் ஆற்றல் சான்ற சூழ்ச்சித் திறனுக்கு வீழ்ச்சி யுறாது, காழ்த்த சிந்தையும் கலக்கமில்லா உள்ளமும் கொண்டு, ஒன்னலர் வெந்நிட்டோட முன்னிட் டொறுத்து, வாகை சூடி வெற்றி முரசினை கொட்டுந் தூணையும், பெற்ற பொன்னாட்டிற்கு உற்ற துயர் களையுமாறு யாது கொல், என்று உறுங்கவ லெய்துவராகலானும், விழுப்பந் தரும் வழுக்கி லொழுக்க மற்ற கயவர்கள் உண்ணுவது முறங்குவ தும் பெண்ணியலா ரின்னலமே பேணுவது மன்றி, நாட்டுப் பற்று, மொழிப் பற்று, தம்முரிமை முதலியன வின்றி, அறியாமை, பழிச் சொல் முதலியன உற்றும் கிஞ்சித்தே னும் நெஞ்சத் தவல மின்றித் திரிவராதலின் ;

> **நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்;**
> **நெஞ்சத் தவல மிலர்.**

என்று குறிப்பா லிகழ்ந்து போந்தனர். இறையுலகுறையும் தேவர்கள் பிறவிப் பெருங் கடல் கடந்து இரு வினையு மற்றுப் பெரு நிலைப் பேறு பெற்றவராதலின், அவர்கள் வேண்டிய பேரின்பங்களைப் பிற ருதவியின்றி வேண்டி யாங்கு எய்துந் தன்மை போன்று, குறை யுலகுறையு

மக்களோ டுரு வொன்றிய கயவர்களும் தன்னை நியமிப்பா ரில்லை யென்று, தருக்கி விலக்கற்பாடின்றி வேண்டியவாறே யொழுகு முள்ளக் கிளர்ச்சியுடையவர் என்பதனை,

தேவ ரனையர் கயவர் அவருந்தான்
மேவன செய்தொழுக லான்.

என்ற குறளடியான் புகழ்வார் போன்று பழிக்கும் பான்மையி லமைத்துச் சென்றனர்.

மாண்பிறந்த மான மொன்றையே பின் பற்றிப் புறப் பட்டியா யொழுகும் புல்லறிவுற்ற கயவர்கள், தன்னிற் ருழ்ந்து அகப் பட்டியா யொழுகும் அறிவில் லாளனைக் கண்ட ஞான்று, அவனினும் தன்னை வேண்டியவாறு ஒழுகும் கயவன் என்று கற்றறிந்த மக்கள் கூறும் இழி வுரையைப், புகழுரையாகப் பிறழ வுணர்ந்து அவ்வகப் பட்டியா யொழுகுவானைக் காட்டிலும் தன் கய மிகுதியை மேம்படுத்திக் காட்டி, செம்மாந்து செருக்குறுவான். என்றும் கையாலறையப்பட்ட பறை சென்ற விடந் தொறும் செய்திகளைத் தாழ்த்தாது யாவரு முணர அறிவிப்பது போன்று, கயவர்கள் தாங்கேட்ட மறைப் பொருளைக் கால மிடம் நோக்காது, நமர், பகைவர் என்ப தனையும் அறியாது, அயலார்க் கறிவித்துத், தமக்கும் தம் இனத்திற்கும் தந்நாட்டிற்கும் தடுக்க யியலா இன்னல்களை யேற்படுத்தியும் பொறுப்பின்றித் தம் நாட்டையும் இனத் தையும் காட்டிக் கொடுத்த பெரும் பழியை ஏற்றும் அதற் கிரங்காத இயல்புடையவர் என்பதனை அறிவிப்பார் போன்று,

அறைபறை யன்னர் கயவர் தாங்கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்

என்று எச்சரிக்கின்ருர்.

இரந்து உயிர்வாழும் இளிவுடையார்க்கும் ஈர்ங்கை விதிராக் கல்நெஞ்சக் கயவர்களிடம், யாம் பெறவேண்டிய தொன்றினை, முறுக்கியகையோச்சிக் கதுப்பினை நொறுக்கிச் செருக்கினை யடக்கிப் பெற்ருலன்றி மனமொப்பியிசையா ராதலின், எளிமையாய்ப் பயன் படுத்த முடியாத கருப்பங் கழியினை யொடித்து ஆலைப் பொறியின் கண் நுழைத்து,

நெறியச்செய்து சக்கையகற்றிச் சாற்றினைப்பிழிந்து பயன் படுத்திக்கொள்வது போன்று அவ்வன்னெஞ்சப் பயன் படாக் கயவர்களை வெருட்டி நையப்புடைத்து வலிந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதனையும் வள்ளுவர் வாய் மொழியான் நன்கு உணரலாம்.

வறுமை யுற்று வாடிய வொருவன் தன் மெய்வருந்த உழைத்ததின் பயனால் பெரும்பொருள் பெற்றுப் பொன்னு மணியு மணிந்து மண்ணும் மனையும் பெற்று பட்டுந் துகிலுமுடுத்துப் பாலோடடிசிலுண்டு ஊர்தியின்கண் பல ரறியப் பீடுடன் புகழ்பரப்பிப் பொலிவுடன் செல்வதைக் காணின் அது பொறுது அந் நல்லான்மேல் அழுக்காறுற் றுப், பொருந்தாக் குற்றங்களை அவன்மேல் பொருந்தக் கற்பித்து ஊரறியப் பழி தூற்றித் திரியுங்கயவர்கள் உண வின்மை யானுக, உடையின்மை யானுகப் பிறி தொன்றி ஞனுக இன்னல் ஏற்படின் அவ்வின்னலைப் போக்கிக் கொள்ளும் வகையின்றி உயிரொன்றிய உடலையும் உயி ரினுஞ் சிறந்த மானத்தையும் விற்றுப் பிழைக்கும் இழி வுடையர் யென்பதனை

> எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
> விற்றற் குரியர் விரைந்து

என்ற அருங்குறளான் விளக்கியுள்ளார்.

இக்குறைக் குணமலிந்த கயவரிடத்து உயர்ந்த பொரு ளும் உறுதிப்பொருளும் ஒரோவழிக் கேட்கப் படுதற்கேது என்னெனின், தாங்கள் மறைத்து இயற்றும் கயச்செயல் களை ஒருகால் பொதுமக்கள் ஐயுற்றறிந்து ஒறுப்பர் கொல் என்ற அச்சமும் அந்நற்செயல்களுக்கு மகிழ்ந்த மக்கள் ஏதாவது பொருளுதவி செய்வார்கள் என்ற அவாவும் அன்றித் தம் மனத்தானவ்வாறு செய்கின்ருரல்லர் ரென் பதனையும் வள்ளுவர் தெள்ளிதின் விளக்குகின்ருர்.

மேலும் மொழியியல்புக்கு மாறுபட்ட சீர் திருத்தம் செய்ய முற்படும் கலைக்கொலை புரியும் கள்வர்களும் மொழிக்கொலை புரியும் மூடர்களும். ஒலிக் கொலைபுரியும் உலுத்தர்களும் மேற்கூறிய கயவர்களின் தன்மை சான்ற வர்களே யன்றி மக்கள் என்று கூறுவதற்கு எவ்வாற் ருனும் தகுதியுடையவரல்லர்.

"இயல்புடைய மூவர்."

நா. நல்லொளியன்.

கிழாய், மணல்மேடு P. C., மாயூரம் தாலுக்கா.

மூவர் என்றவுடனே, நேயர்களிற் சிலருக்கு, அப்பர் சுந்தரர் சம்பந்தர் எனும் நாயன்மார் நினைவு வரும். அவர்கட்கு மூவர் என்று பெயர் தவிர அவர் பாடல்களுக்கும் மூவர் தேவாரம் என்ற பெயர் வழங்குகின்றது. அன்னோர் இயல்புடைய மூவர் என வழங்கப் படாமையின் ஈண்டுக் கூறுவோர் அவரன்மை யோர்க.

தண்டமிழ் மறைக்குப் பதின்மருக்குமே லுரைகண்டும் சிலவிடங்களில் ஏற்கும் உரை வெளிப்பட்டிலாமை வருந்தத் தகுவ தொன்றேயாம். உரை செய்வார் நூலாசிரியன் உளத்தை யுணர்ந்து கூறுதற்கு அவர் காலத்த ரல்லாமையே இவ் வளவிற்குங் காரணமாகின்றது. அவர் மீது குற்றமில்லை. அக்காலச் சூழ்நிலை உரையாசிரியரை யீர்த்துச் செல்கின்றது. ஆதலால், எவ்வெக் காலங்களில் எப்பொருள் தோன்றியதாகக் கருதினர் என்பதை உணர்ந்தால் அக்கால மக்கள் ஒழுகலாற்றைத் தெற்றென விளக்கும் கண்ணுடியாதலைக் காணலாம். இல் வாழ்க்கை அதிகாரத்தில் ஓர் குறளின் பொருட்பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இல்வாழ்க்கை மக்கள் இயல்பாக வாழும் வாழ்க்கை. உலகில் வாழும் உயிர்களுள் ஆணும் பெண்ணும் கூடி வாழும் இயற்கை வாழ்க்கையை இல்வாழ்க்கை எனவும், அறிவின் ஆற்றலால் இயற்கையை முரணி வாழும் வாழ்க்கையைத் துறவு வாழ்க்கை எனவும் கூறுவார். உயிர்கள் கூடிவாழு மியல்பின. அவை பெருக்கத்திற்கு இன்றியமையாத ஆண்பெண் கூட்டுறவு இயற்கையாகவே நடைபெறுகின்றன. அங்ஙனம் கூடிய ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழுமியல்பின பல. இவ்வியல்பு விலங்குகளிடத்தில் அதிகம் காணப்படுவ

தில்லை. பறவைகளிட முண்டு. ஆனால். விலங்கினும் மேலாம் பகுத்தறிவு படைத்த மாந்தன் கூடிய பெண் ணோடு இருவரும் வாழ்தற்கோரிட மமைத்து அதனுள் ளிருந்து வாழும் வாழ்கை இல்வாழ்க்கை எனப்பட்டது. இல்லிலிருந்து வாழும் வாழ்க்கை அங்கு மன்னியிருத்தல் பற்றி மனைவாழ்வெனவும் வழங்கலாயிற்று. இயற்கையை எதிர்த்து வாழும் வாழ்க்கையை எல்லோரும் மேற் கொள்வரேல் அவர்களுடனே இவ் வுலகில் மக்கள் வாழ் நிலை முடிவுற்றுப்போம். பின் மாந்தரைக் காணவியலா தாதலால் இவ்விரு வாழ்க்கையினும் சிறந்தது இல் வாழ்க் கையாதலாற்றான் அறமுறை யுணர்த்தும் பாலின் முற் கூறினார் திருவள்ளுவனார்.

மக்கள் கூடி வாழும் போழ்து ஒருவருக்கொருவர் துணைபுரிந்தே வாழவேண்டியிருக்கிறது. வாழ்விற்கு வேண்டிய ஊண் உடை உறைவிடம் உறவு நட்பு ஏவல் நிறை செல்வம் நோயின்மை ஆண்மை வீரம் அறிவு கல்வி கற்புடைமை முதலியன இன்றியமையாது நிறைந் திருக்கும் வாழ்வே நல்வாழ்வெனப்படும்.

மக்களுயிர் வாழற்கின்றியமையாத உணவுப் பொரு ளைப் பெருக்கப் பாட்டாளி உழவன் இல்லத்தான் மெய் வருந்தப்பாடுபட்டு நிலந்திருத்திப் பயிரிட்டுக் குளந்தொட் டுக் காவளர்த்துக் கதிரறுத்துக் கனிவுடன் தருகின்றான். வெறும் நெல்மட்டும் கிடைப்பின் அதைமட்டும் உண்டு வாழமுடியுமா? அதனோடு அறுசுவைப்படப் பலபொரு ளையும் கலந்து அட்டுண்டாற்றான் உடல் நனி வளரும். ஆண்மையும் அறிவும் வீரமும் செறியும். நீடு வாழலாம்.

நம்மிடம் விளைந்த பொருளை வேறிடம் கொண்டு சென்று கொடுத்துப் பண்டமாற்றாக அவணுள்ள வேறு பொருட்களை வாங்கிவந்து தரவேண்டிய நிலை யேற்படு கிறது. அவ்வாறு கடல் கடந்தும் நிலங்கடந்தும் விற்று வந்த மக்களே வணிகராவர்.

இவ் விரண்டு தொழிலும் இடையறாது நேரிதின் ஒழுகவும், கள்வர், விளங்கு, நீர், தீ, பகை, ஏவலர் முத யோரால் தீங்கு விளையா திருக்கும் படியும் பார்த்துக்

கொள்ள வேண்டிய பொறுப்பு மிக மிக முக்கியமானது. அதனைச் செம்மையாகக் கொண்டவ ரரச ராவர்.

இம் மூவருக்கும் முறை யறிந்து காலந் தேர்ந்து செய்யக்கடவதின்ன தென்றும் தவிரக்கடவதின்ன தென்றும் எடுத்துக் கூறிச் செய்யுமாற்றையும் விளக்குதல் பயன் உணர் மூதறிஞர்களின் கடமையாயின. அவரே தக்க கல்வி பயிற்றும் பேராசிரியராவர். இந் நால்வரும் தத்தம் தொழில்களைச் செய்யாவிடின் வாழ்வு வாழ்வாகா தென்பாராய்த் திருவள்ளுவர்

> இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை;

என்றார். (பொருள்) இல்வாழ்வா னென்று கூறப்படுபவன் நல்லியல்புடைய அரசர் அறிஞர் வணிக ரென்னும் மூவர்க்கும் நல்லாற்றின்கண் நின்ற துணைவனாவன் என்பதாம்.

இல்வாழ்வான்—வேளாளன், பயிர்த்தொழிலுடையோன், உழவன் என்பவனாவன், இல்லத்து இல்லாளோடிருந்து பாடுபட்டுப் பாரைத்திருத்தி உழுவித்து விளைவித்து அரிந்து அடித்துக் குவியலாக்கிக் களஞ்சியத்தில் உணவுப் பொருளைச் சேர்த்து இறைதந்து பகுத்துண்டு பல்லுயிரோடு விருந்தோம்பித் தக்கார்க்கு வேளாண்மை செய்து இறப்போர்க்கீந்து ஒப்புறவொழுகிப் புகழ்பெறத்தக்க அறவோனாதலின். நல்லாறு உவம ஆகுபெயர், நல்லநெறி. ஆறானது தன்னிடத்து நீர் நிறைந்தோடுங் காலத்தன்றி வறண்டகாலத்தும் ஊற்று நீரால் உலகூட்டல்போல நிறைந்த விளைபொருள் குறைந்த போழ்தும் அரிய முயற்சியின் விளைவித்து உலகோர்க்களித்து வளர்த்தலான் நல்லாறெனப்பட்டது. நின்ற துணை—நிலைத்ததுணை, ஆற்று வெள்ளத்திற் கலங்காது நிற்கும் கற்றூண் போல இயல்புடையார்க்கு இடருறாது காக்கும் நிலைத்த நிலைத்துணையாகும். நல்லியல்பு அவரவர்க்குரிய இயல்பு. இது முன்னர்க் கூறப்பட்டது. இவை செவ்விதின் இயலாவிடில் வாழ்க்கை சிறக்காது.

இல்லில் இல்லாளோடு கூடி வாழ்வாரெல்லோரும் இல்வாழ்வா ரல்லரோ? எனின்! வேளாள ரல்லாத

அரசர் அறிஞர் வணிகர் முதலியோர் இயல்புகள் யாவும் ஊன்றுசால் மருங்கில் ஈன்ற பயனின்ருயின் இல்லையாய் விடும். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும் "இருந்தோம்பி யில்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய் தற் பொருட்டு" என்றும் "தாளாற்றித் தந்த பொருளெல் லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றும் ஆசிரியர் பின்னும் கூறி யுள்ளமையால், விருந் தோம்பி ஒப்புர வொழுகல் முதலியன. உழுவார்க்கன்றி ஏனோர்க்கியலாதாகலான் உழுவரே இல்வாழ்வார் என் பது தேற்றம். இஃதே யாசிரியர் கருத்தாதலும் நோக்குக.

இயல்புடைய மூவர் என்பதற்கு அறவியல்பினை யுடைய ஏனைப் பிரமசரிய வானபிரத்த சந்நியாசி எனப் படு மூவரென்ரு லென்னை எனில், பிரமசரியன் குரு குலத்துக் கல்வி பயின்று இரந்துண்ணும் வாழ்வினனு கலின் அவனுக்கு நாளும் உதவுதலும், விரதங் காக்கையில் பேண வியலாமை யானும் துவ்வாதவரு ளடங்குவ ராத லானும் இவனுல் இல்வாழ்வானுக்கு நன்மையு மின்மை யானும், வானப்பிரத்தன் காட்டில் வாழு மியல்பின னுத லானும் காடுதேடிச் சென்று நாளும் பேணுவதியலாதாக லானும், சந்நியாசி முற்றத்துறந்த யோகியர் ஓரிடத்தும் நிலையின்றிச் சுழல்வ ராதலானும் இவர்களைப் பேணுதல் இவர்களால் இல்வாழ்விற்கு இன்றியமையா நன்மையு மின்மையானும் துறந்தார் என்னும் தொகுதியு ளடங்கு தலானும் அது பொருந்தாமை காண்க.

மூவர்—தாய் தந்தை மனைவி அல்லது பெற்ருர் பெண்டு பிள்ளை முதலியோரெனக் கூறினுலென்ன? தாய்தந்தை யின்றி மகனில்லை யாதலானும் மனைவியின்றி யில்வாழ் வில்லை யாதலானும் இல் வாழ்வின் கான்முளையே மகனுத லானும் இல்வாழ்வை நடாத்துவோரவரே யாதலானும் இவர்களின்றி இல் வாழ்வின் ருதலானும் துணை செய்தல் தனக்குத் தானேயன்றி பிறர்க்கே யாதலானும் அஃதும் பொருந்தாமை காண்க.

இயல்புடை மூவர்—புலவர் பாணர் கூத்தராகாரோ? வெனின் அவர்கள் தத்தமக்குத் தனியியல்புடைய ராயி

304 ஆம் பக்கத் தொடர்ச்சி.

முதல் வினையான் முடிந்தது. உலகத்தார் என்பது அறிவுடையோர்மேற்று அவன் எல்லாம் உளன் என்றதை ஒருமைப் பன்மை மயக்கமென்க.

'வாய்மையை மூன்று வகைப் படுத்திக் கூறினீர். முதற்கண் பொய்யாமை யென்னும் வாய்மையைக் கடைப் பிடித்துத் தவஞ் செய்வார்க்கு உளதாகும் பயனை யறிய விழைகின்றேன்' என்றாற்கு விடை இக்குறளாற் கூறுகின்றார். இருவினை யொப்பு முதலாயின நிகழப்பெற்று ஞான சாதனப் பேறடைந்து தவஞ் செய்வானுவான், தனக்கு ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப் படுதற் பொருட்டுப் புறப்பொருட் கருத்தை அறவே நீக்கி அக நோக்கு மாத்திரையான் நிற்றற்க முயல்வன். அங்ஙனம் முயலுகையில் ஒரோவிடத்து உலகத்து மக்களுட் பலரும் நிலையிலவாகிய சிற்றின்பங்களுட் டொடக்குண்டு துன்புறுதலைக் கண்டானுயின் அவர் பொருட்டுப் பரிவன். அப் பரிதல் நிலையுளதாகிய பயனளித்தற் கேதுவாகும் வாய்மைச் சொற்களைச் சொல்லி அவரைக் கடைத் தேற்றல் வேண்டுமென்னும் புறப்பொருட் கருத்தின்கண் ஊன்றச் செய்து அகநோக்கைக் கெடுத்துத் தீமை விளைவிக்கும். இதனையுணர்ந்து அச் சொற்களைச் சொல்லாது நின்றானுயின் வஞ்சனையானது மேம்பட்டு அவனைக் கெடுக்கும். ஆயின், அவன் முன்னரே தன் மனமானது பிறர் மாட்டுச் சிறப்பு வகையான் பரிந்தோடா வண்ணம் 'உலகத்துப் பிழையொன்று மில்லை. அது பற்றி என்னுல் ஆகவேண்டியது

னும் பாணரும் கூத்தருமின்றி மக்கள் வாழ்வு நடத்த வியலுமாதலானும் இவர்களையும் இல்வாழ்வான்றான் பேணவியலு மெனற்குரியதோர் சிறப்பின்மையானும் அஃதும் ஏற்புடைத்தாதலின்மையை யோர்க.

இதுகாறும் கூறிய வாற்றான் இல் வாழ்வான் என்பான் உழவனே என்றும் ஏனைய அரசர் வணிக அறிஞர்களே இயல்புடைய மூவர் என்பதும். பிறஉரையாசிரியர்கள் கூற்றுப்படி ஏனைய பிரமசரியன் முதலானோரும் இயல்புடைமூவராகாமையும் புலப்படுத்தியவாறும். அறிஞருலகம் இன்னும் ஆராயுமாக.

யாது மில்லை. எல்லாம் இறைவன் செய்திகள்' என்னுஞ் சிந்தையனுய்ப் பொய்யாமை யென்னும் ஞான வாய்மை கடைப் பிடித்துத் தன் தவத்தின்கண் உறைத்து நின்ருனுயின், அவற்குப் பிறர் துன்பங் காணுதலும், அவர் பொருட்டுப் பரிதலும் தானறிந்ததை வஞ்சனையான் மறைத்தலும் உளவாகா. அவன் தவமும் முதிரும். அதன் முதிர்ச்சியில் ஞானம் விளங்கி ஞேயங் காட்சிப் படும். அது பட, அவன் சீவன் முத்தி நிலையைத் தலைப்பட்டுச் சிவத்துவம் முழுவதுந் தன்பால் விளங்கப் பெறுவன். அது விளங்க, அறிவுடையோர் பலரும் அவனை இறைவனுக்கு வேருகக் காணுது, அவன் செய்திகள் அனைத்தையும் இறைவன் செய்திகளெனக் கொண்டு அவன் மாட்டு அன்பு செய்து நிற்ப ரென்று கூறியவா ருயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'ஒருவன் தன்னுள்ளத் திற் கேற்பப் பொய் கூருது தொழுகுவனுயின் அவன் உயர்ந்தோ ருள்ளத்தின் க ணெல்லாம் உளனும்' என்னும் உரையையும் உள்ளத்தா லென்பது வேற்றுமை மயக்கம். பொய் கூருது தொழுகுதலாவது மெய் கூறி யொழுகுதல். அவ னதறத்தினது அருமை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்ப ரென்பதாம். இதனுன் இம்மைப் பயன் கூறப்பட்டது' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

ஈண்டுத் தவஞ் செய்வான் மாட்டுக் காணப்படும் பொய்யாமை யென்னும் ஞான வாய்மையையே ஆசிரியர் கருதி நின்ரு ரென்பதனை யறியாது, அழகியாராவார். 'பொய் கூருது தொழுகுதலாவது மெய் கூறி யொழுகுதல்' என்று கூறியமையான் உரை வழீஇயினு ரென்க.

இனி, 'அவ னதறத்தின தருமை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்ப ரென்பதாம்' என்றதை 'எப்பொழுதும்' என்ற சொல்லானும் ஏகாரத்தானும் வெறும் உபசாரக் கூற்ருக்கி விட்டு 'இதனுன் இம்மைப் பயன்கூறப்பட்டது' என்றமையான் உரைவழீஇயினுரென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின் : தவஞ் செய்வானுவான் அறிவுடையோரது அன்பைப் பெற விழையின், பொய்யாமை கடைப்பிடித்துத் தவத்தின்கண் கருத்துச் செறியுமாறு நிற்க. (தொடரும்)

298 ஆம் பக்கத் தொடர்ச்சி.

வளர்த்து வரும் பெருந்தகைமையையும், அவற்றை மேன்மேலும் வளம்படுத்த வேண்டிய இன்றியமை யாமையையும் விரிவாக எடுத்துரைத்து, மகா சந்நிதானம் அவர்களைச் சிறப்பாகப் பாராட்டினார்கள்.

பழங்கலைகளை வளர்க்கும் பணியினை மேற்கொண்டு நடத்து வதற்கு ஒரு குழுவும் அமைக்கப்பெற்றது. அன்பர்கள் பலர் பழங் கலைவளர்ச்சி குறித்து கனிவுறப் பேசினார்கள். அதுபோது ஆதீன சைவ விரிவுரையாளர் திருவாளர் ஆறுமுகம் பிள்ளை யவர்கள் பழங்கலைகளுள் ஒன்றாகிய தசாவதானம் (பத்து நினை வுக்கலை) செய்தார்கள். பின்னர்த் திருவிழா சிறப்பாக நிறை வேறியது.

* * * *

அடுத்த நாள் செவ்வாய்க் கிழமை காலை தருமபுர ஆதீனச் சார்பில், இருபத்தைந்தாவது மகா சந்நிதானம் தெய்வத்திரு. சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் திருமுன் திருவாளர் C. மருதவாணன் பிள்ளை யவர்கள் திறந்துவைக்க, திருவாளர் V. நாடிமுத்துப் பிள்ளை யவர்கள் தலைமையில் திருவெம்பாவைத் திருவிழா நடை பெற்றது.

அதுபோது சைவ சமயத்தின் மேன்மையும், திருவெம் பாவைக் கருத்தும் ஆதீனங்களின் தொண்டுகளும் விரிவாகவும், மேன்மையாகவும் பாராட்டப் பெற்றன. மகா சந்நிதானம் அவர்கள் ஆசிமொழியுடன் திருவிழா சிறப்பாக நிறைவுற்றது.

மூன்ருவது தமிழ்த் திருவிழா, கோயம்புத்தூர்.

(தமிழ் வளர்ச்சிக்கழகச் சார்பில்.)

தமிழ்நாட்டு அன்புடையீர் !

வணக்கம்.

சென்னை மாகாணத் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' நிறுவி மூன்று ஆண்டுகள் ஆயின. இக்கழகத்தின் சார்பில் முதன் முதலாகத் தமிழ்த் திருவிழா 1947-ம் ஆண்டில் மதுரையில் நடத்தப்பெற்றது. இரண்டாவது விழா சென்ற வருடத்தில் திருவாரூரில் மிகச் சிறப்பாக நடந்தது. மூன்ருவது விழாவைக் கோவையில் நடத்த அன்பர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதற்கான காரியங்களை ஆலோசிக்க திரு. டாக்டர் R. K. சண்முகம் செட்டியார் அவர்கள், திரு. T. S. அவிஞசிலிங்கம் செட்டியார் அவர்கள் ஆகிய இருவரின் அழைப்பின்பேரில் 14—12—49-தேதி திரு. டாக்டர் செட்டியார் அவர்கள் இல்லத்தில் ஆரம்பக்கூட்டம் நடந்தது. விழாவிற்காக ஒரு வரவேற்புக் கழகம் நிறுவப்பெற்றது. விழாவை அடுத்த விகுருதி ஆண்டு சித்திரைத் திங்களில் (April — May 1950) இரண்டு நாட்களில் நடத்த முடிவு செய்யப் பெற்றுள்ளது. கலை, விஞ்ஞானம் ஆகிய பொருள் பற்றிப் பேரறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள். அவ்வமயம் இயல், இசை நாடக விருந்துகளும், கண்காட்சியும் நடத்த எண்ணியுள்ளார்கள்.

தமிழ் நாட்டு மக்களின் ஆர்வம் மிகவும் உன்னத நிலைமையிலிருப்பினும் உண்மைச் சூழ்நிலை பெரிதும் கவலைக்கிடம் தருகிறது. இந்நிலையில் விழாவைப் பயன்தரும் வகையில் நடத்திக் கொடுக்கவேண்டியது தமிழ் நாட்டு அன்பர்களின் பெரியதோர் கடமையாகும்.

திருவிழா வரவேற்புக் கழக உறுப்பினர் கட்டணம் குறைந்த அளவு ரூ. 25 என்று முடிவு செய்யப்பெற்றுள்ளது. நல்வாய்ப்புப் பெற்ற அன்பர்கள் நன்கொடையாகப் பெருந் தொகைகளைக் கொடுத்து உதவினுல் விழாவைச் சிறப்பாக நடத்த இயலும். ஆகையால் தாங்கள் இப்பெரும் பணியில் அன்பும், ஊக்கமும் கொண்டு ஒத்துழைத்து நம் சில்லாவில் நடைபெறும் விழாவை மிகவும் சிறந்த முறையில் நடத்திக் கொடுக்கும்படி வரவேற்புக் கழகத்தின் சார்பாக அன்பர்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

C. S. இரத்தினசபாபதி முதலியார்,

16—12—1949, வரவேற்புக் கழகத் தலைவர்.

வகை செய்.

"செங்கோ"

A. ஞானரத்தினம், சாலைத்தெரு, இராமநாதபுரம்.

ஓராண்டு உழைப்பின் களைப்புத்தீர விடப்பட்ட கோடை விடுமுறை காலம். வெய்யோன் கொடுமை ஒருபுறம். வேலையின் அலுப்பு மற்றோர் புறம். அதிர்ச்சியை யுண்டு பண்ணும் சுற்றுப்புறம். அதிலே பயனற்ற பேச்சுக்கள். கவைக்குதவாக் காலவிரயத்தைக் கண்டு கலங்கி அமைதிகாண ஆசைப் பட்டேன். எங்குச் சென்றால் இன்பம் துய்க்கலாமென்று சிந்தனையி லாழ்ந்தேன்.

யாரோ வரும் சத்தங் கேட்டுத் திடுக்குற்றேன். என் சிந்தனையைச் சிதைத்த செல்வி வேறு யாருமில்லை. என் இதயத்தில் முதலிடம் பெற்ற இனியாள் தான். என் உயர்வால் தன் உயர்வு தானே யுண்டாகுமென மட்டில்லா மகிழ்வுட னிருந்தவள் பொலிவற்ற கலம்போல் இன்று மகிழ்ச்சியற்ற முகத்துடன் விளங்கினாள். அமைதியுடன் எழுந்தேன் அன்புடன் தழுவி முத்த மிட்டாள். கன்னம் 'சில்'லெனக் குளிர்ந்தது. கன்னத்தைத் தடவினேன். கரத்தில் நீர் பட்டது. ஏறெடுத்துப் பார்த்தேன். என் மாதாவின் கண்களில் நீர். எந்த ஆண் மகனும் கண்டு சகிக்க முடியாத கர்ண கடூரக் காட்சி. பிரளய வெள்ளத்திற் புரளும் உணர்வு கொண்டு உற்று நோக்கினேன் உள்ளக் குறையை யறிய: வாயைத் திறந்து வருத்தங் கூறுளோவெனத் தவித்தேன். மனக் கலக்கங் காண மயங்கினேன்; தெளிவு பெறத் திகைத்தேன். என்னை அதிக நேரம் இந்நிலையில் விட எண்ணவில்லை என் அன்னை, அருவியைத் தேக்கிய அணையை உடைத்தாற்போல் அவள் உள்ளக் கதவை யுடைத்தாள். உருண்டோடிச் சாடிற்று அவள் உள்ளக் கிடக்கை.

"பொறுப் புணர்வு கொள்ளும் புத்திரனே! தாய் குறை தவிர்க்கத் துடிக்கும் தனயனே! பல காலம் என் நெஞ்சில் பதுங்கிக் கிடக்கும் சோகச் சரிதையைக் கேள். எனக்குச்

சொந்தமாய் ஒரு சோலை யுண்டு. அதிலேதான் நான் பிறந்து வளர்ந்தேன். உண்டு மகிழ்ந்தேன், உறங்கி விளையாடினேன், அது எவ்வளவு இன்பமான காலம் தெரியுமா? அங்கே மலருண்டு, மாங்கனி தீங் கனிகளுண்டு, நிழலார் தருக்களுண்டு நீரோடை யுண்டு, பாணருண்டு, பாட்டிசைக்க யாழ் வல்லாருண்டு இசையெழுப்ப'' என்று வளர்த்துக் கொண்டு போன வளை வழிமறித்து, 'உனக்குச் சொந்தமாகவா?' என்றேன்.

'ஆம்' என்றாள்.

'எங்கே யிருக்கிறதம்மா அவ்வெழிற் சோலை? அப்படிப் பட்ட இடத்தைத் தான் நாடித் தேடுகிறது நலிந்த என் உள்ள'மென்றேன் ஆத்திரத்துடன்.

'பக்கத்தில் தானெ'ன்று பதிலிறுத்தாள்.

'அம்மா! வா! உடனே புறப்படுவோம்' என்று எழுந்தேன்.

'நில் மகனே! அன்றிருந்த அருமையைத் தெரிந்தாயே யொழிய அது இன்றிருக்கும் நிலையை நீ அறிய வில்லையே. அதையும் சொல்கிறேன். கேள்! தந்தை இறந்தார். முதிர்ந்தவைப் போற்றி கன்று நடுங் காவலருங் கழிந்தனர். கவனிப்பாரற்று இண்டும் இசங்கும் இடையிடையே முளைத்து இறுகப் பின்னியிருக்கிறது வழியெல்லாம் களை வளர்கிறது காவிற்குமேல் வேலியிடுகிறேரு மென்று கள்ளியையும் முள்ளியையும் கண்ட விடமெல்லாம் நட்டு விட்டனர். வானம்பாடி யிருந்த இடத்தில் படம் ஆடியும், குயிலிருந்த இடத்தில் கோட்டானும், குடிபுகுந்திருக்கிறது. நரிகளும் ஓநாய்களும் நடுவே யுலாவுகின்றன. பாலைவனம் போல் பாழ் பட்டுக் கிடக்கிறதப்பா!'

'பரவா யில்லை யம்மா! கோட்டானை யோட்டி, பாம்பைப் படத்தி லடித்து, நாயையும் நரியையும் விரட்டி, கள்ளியையும் முள்ளியையும் களைந்து, மறுபடியும் பல்வளம் செழிக்கச் செய்து பார் புகழச் செய்யும் திறம் உன் பிள்ளைக்கு உண்டென்பதை உனக்கு.........ஏன் உலகிற்கே உணர்த்துகிறேன். வா! வழிகாட்டு. வாழ் வளிக்க வளமடையச் செய்கிறேன்,' என்றேன் இதையத் துடிப்புடன். (தொடரும்.)